**கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் கூட்டுறவு அபிவிருத்தி நிதியம் - 2013**

கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளினதும் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புகளை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டுக் நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டுக் நியமம் 02 இன் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது ரூபா 1,596,142 தொகையான நிலையான சொத்துக்கள் கொள்வனவு மற்றும் ரூபா 166,411 தொகையான மானியங்கள் மற்றும் நிதிய குறைவு, முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவை தொழிற்பாட்டு செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் இணக்கம் செய்யப்பட்டிருந்த ரூபா 10,344,030 தொகையான ஐயக்கடன் ஒதுக்கீடு காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது நிதி அசைவிற்கு தாக்கம் செலுத்தாத உருப்படியாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த, எனினும் தற்போது பயன்பாட்டில் காணப்படும் ரூபா 3,295,000 கிரயத்திலான மோட்டார் வாகனங்கள் மற்றும் ரூபா 350,000 பெறுமதியான கட்டிடமொன்று தொடர்ந்தும் நிதியத்தின் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்த போதிலும், அதன் நியாயமான பெறுமதியை காண்பிப்பதற்காக சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிக்கூற்றுக்களில் 07 ஆண்டுகள் முதல் 18 ஆண்டுகள் வரையான காலவீச்சில் காணப்பட்ட ரூபா 21,716,000 தொகையான கடனை அறவிடுவதில் நிச்சயமற்ற நிலைமையொன்று காணப்பட்ட போதிலும், அதற்காக போதியளவு ஏற்பாடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.3 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2 சொத்து மீதிகள் அதன் பட்டோலைகளின் மீதிகளுடன் ஒப்பிடும் போது ரூபா 24,827,350 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை.

கீழே காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு விடயங்களின் முன்னால் காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

| | கணக்கு விபரம் | பெறுமதி | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாத எழுத்துமூல சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | கூட்டுறவுச் சங்கக் கடன்கள் | 14, 056,728 | |
| (ஆ) | கமநல நிதிய கூட்டுறவுச் சங்கக் கடன்கள் | 9,482,737 | மீதி உறுதிப்படுத்தல்கள், காலப்பகுப்பாய்வு |
| (இ) | கூட்டுறவுச் கல்லூரிக் கடன்கள் | 2,666,000 | |
| (ஈ) | வடக்கு கிழக்கு கூட்டுறவு சங்கத்திற்கு வழங்கிய லொறி வண்டிக்கடன் | 19,050,000 | |
| (உ) | கமநல நிதிய மீதி | 3,001,000 | விரிவான பட்டோலைகள் |

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2008 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 2,411,653 தொகையான மதிப்பிழந்த காசோலைகளுக்குரிய கடன்பட்டோர் இனங்காணப்பட்டு அப்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐந்தொகையில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 3,183,600 தொகையான செயலாற்றல் முற்பணம் மற்றும் பெறவேண்டிய நீதிமன்ற இழப்பீடு 04 ஆண்டுகள் முதல் 05 ஆண்டுகள் வரையான காலமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 05 ஆண்டுகள் முதல் 08 ஆண்டுகள் வரையான காலமாக இருந்து வரும் ரூபா 48,545,999 தொகையான 7 கடன்கொடுத்தோர் மீதிகளைத் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2012 ஆம் ஆண்டிலிருந்து முன்கொண்டு வரப்படும் ரூபா 180,395 தொகை அரசாங்க கணக்கிலிருந்து பெறவேண்டிய மீதி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(உ) 02 ஆண்டுகள் முதல் 07 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் இருந்து 09 கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சமாஜங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியதாக இருந்து வரும் ரூபா 3,969,799 ஆன பங்களிப்புத் தொகை திசெம்பர் 31 வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்தவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

---

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் போன்றவற்றிற்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| (i) நிதிப்பிரமாணம் 188(2) | 2011 ஆம் ஆண்டு மற்றும் மீளாய்வாண்டிற்குரிய ரூபா 300,000 கூட்டுத்தொகையான வைப்புச் செய்யப்பட்டு ஆனால் தீர்வையாகாத 02 காசோலைகள் தொடர்பாக 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 169(2) | 2011 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 55,809 கூட்டுத்தொகையான வைப்புச் செய்யப்பட்ட எனினும் தீர்வையாகாத காசுக் கட்டளையொன்று தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப் பிரமாணம் 396 | 2010 ஆம் ஆண்டிற்கும் மீளாய்வாண்டிற்கும் உரித்தாக வழங்கப்பட்டு எனினும் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்கள் கடந்த ரூபா 46,650 கூட்டுத்தொகையான 04 காசோலைகள் தொடர்பாக 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய 423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை. | |
| (i) 4.1 பந்தி | மீளாய்வாண்டிற்கான வருடாந்த பாதீட்டிற்காக தேசிய பாதீட்டுப் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |

| | | |
|---|---|---|
| (ii) | 4.2 பந்தி | நிதியத்திற்காக புறம்பான வங்கிக் கணக்கொன்றும் புத்தகங்களும் பராமரிக்கப்படுமானால் அக்கணக்கு முறையாக இணக்கம் செய்யப்பட்டு செயன்முன்னேற்றம் தொடர்பாக ஒவ்வொரு காலாண்டிற்குமான அறிக்கை அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | 4.3 பந்தி | கணக்காண்டு முடிவடைந்து 02 மாதங்களுக்குள் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கையொன்றும் திரட்டிய நிதியத்தின் மாற்றங்களைக் காட்டும் கூற்றொன்றும் அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு பிரதியுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2004 யூலை 29 ஆம் திகதிய பிஈடி/25 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | ரூபா 289,632,607 கூட்டுத்தொகையான மிகை நிதி உரிய அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் மீளாய்வாண்டின் போது முதலீடு செய்யப்பட்டிருந்தது. |

## 3. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக நிதியத்தின் செயற்பாடுகளின் நிதி விளைவுகள் ரூபா 4,699,969 மிகையொன்றாக இருந்ததுடன் அதற்கு ஒத்த முன்னைய ஆண்டிற்கான மிகைரூபா 20,956,651 ஆக இருந்தமையால் நிதி விளைவுகளில் ரூபா 16,256,682 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இவ்வீழ்ச்சிக்காக நானாவித வருமானம் ரூபா 5,439,392 ஆல் குறைவடைந்தமை, பங்களிப்புத் தொகை வருமானம் ரூபா 9,251,693 ஆல் குறைவடைந்தமை, வெளிநாட்டு பிரயாணச் செலவினம் மற்றும் ஏனைய செலவினம் என்பன முறையே ரூபா 2,087,230 ஆலும் ரூபா 6,780,330 ஆலும் அதிகரித்திருந்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் நிதியத்தில் வங்கி நடைமுறைக் கணக்கின் மீதி ஒவ்வொரு மாதமும் ரூபா 4 மில்லியன் முதல் ரூபா 100 மில்லியன் வரையான மீதியொன்றாக பேணப்பட்டிருந்ததுடன், மேலதிக நிதியை இனங்கண்டு அப்பணத்தை வட்டி

வருமானமொன்று பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நீண்டகாலமாக இருந்து வரும் ரூபா 141,543 கூட்டுத்தொகையான இனங்காணப்படாத 05 செலவு மீதிகளை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் இனங்கண்டு தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.2 சர்ச்சைக்குரிய கொடுக்கல்வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட ''இசுறு சவிய'' தேசிய கூட்டுறவு தினத்தை கொண்டாடும் விழாவிற்காக 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 159,900,000 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிலும் இவ்விழா நடவடிக்கைகளுக்காக ரூபா 7,886,880 தொகை இலங்கை தேசிய கூட்டுறவுச் சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. விழாவிற்குரிய பாதீட்டு மதிப்பீடு மற்றும் முன்மொழியப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான விபரங்கள் மற்றும் செலவினங்கள் தொடர்பான விபரங்கள் போன்றவற்றை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன், குறித்த தகவல் திணைக்களத்திடம் இல்லையென கூட்டுறவு ஆணையாளர் கணக்காய்விற்கு அறிக்கையிட்டிருந்தார்.

(ஆ) 1972 இன் 5 ஆம் இலக்க கூட்டுறவு சட்டத்தின் 43(i) ஆவது விதிக்கோவையின் 61 ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுறவு கல்வி, செயற்திட்டங்கள், பிரச்சார வேலைகள் கூட்டுறவு சங்கங்களின் முகாமைத்துவ செயற்திறனை மேம்படுத்தல், கூட்டுறவு சங்கங்களுக்கு உதவியளித்தல் போன்ற நோக்கங்களுக்கு நிதியத்திலிருந்து நிதியை செலவிட முடியுமான போதிலும், அதற்கு முரணாக 02 செயற்பாடுகளுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,724,912 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது.

**5 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப் 423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4.3 ஆம் பந்தியின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 பெப்ரவரி 28 இற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தினால் 2014 மார்ச் 20 ஆந் திகதி நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்களை 2014 யூலை 15 ஆந் திகதி மீள திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தன. மீண்டும் நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 17 ஆந் திகதி அதாவது 08 மாதங்கள் தாமதத்தின் பின்னர் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

ரூபா 101,920,000 தொகையான மதிப்பிடப்பட்ட மொத்த வருமானத்திற்கு ஒப்பாக உள்ளவாறான மொத்த வருமானம் ரூபா 36,422,166 ஆக இருந்தமையால் வருமான மதிப்பீடு 64.26 சதவீதத்தினால் மிகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தது.

**5.3 உள்ளகக் கணக்காய்வு**

----------------------------------------

நிதியத்திற்காக வரிசை அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட உள்ளகக் கணக்காய்வு ஐயவினாக்கள் / அறிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

--------------------------------------------------------------

கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது ஆணையாளருக்கு சுட்டிக் காட்டப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) சொத்துக் கட்டுப்பாடு
(இ) பங்களிப்புத் தொகையைப் சேகரித்தல்
(ஈ) கடன் அறவீடு
(உ) பாதீட்டுக் கட்டுப்பாடு